அன்றன்றுள்ள அப்பம் வழங்கும்

# ஒலிவமரக் கன்றுகள்

மே – 2024 | மரம் – 3 | கன்று – 5 | ஆண்டு சந்தா ரூ.250/- | தனிப்பிரதி ரூ.25/- | ஆயுள் சந்தா ரூ.2500/-

அவர் உன் வாசல்களின்
**தாழ்ப்பாள்களைப்**
பலப்படுத்தி, உன்னிடத்திலுள்ள
**உன் பிள்ளைகளை**
**ஆசீர்வதிக்கிறார்.**

சங். 147:13



ஆசிரியர். ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை

# மனம் விட்டு உங்களுடன்...



அன்பிற்குரிய ஒலிவமரக் கன்றுகள் வாசகர்கள் மற்றும் தேவனின் பரிசாக பெற்றோர் கரங்களைக் இறுகப் பிடித்து வாழ (நடை)பயிலும் அன்புக் குழந்தைகளே உங்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். வெம்மையான இக்கோடைக் காலத்தில் சில்லென்ற செய்திகளுடன் சிறகு விரித்து உங்கள் கரங்களில் இவ்விதழை தவழச் செய்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

''நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என மத்தேயு 18:3 இல் இயேசு சொல்வதை கவனியுங்கள். ஆம், குழந்தையாய் மாறுவது, இறைமாட்சியின் அடையாளம் என்பதே அவ்வசனம் சொல்லும் செய்தி.

குழந்தைகளைப் பற்றி அறிய வேண்டுமெனில் குழந்தைகளைப் போல மாறவேண்டும் என்கிறது உளவியல். குழந்தைகளோடு விளையாடும்போது அவர்களோடு தரையில் தவழ்ந்து விளையாடவேண்டும் என்கிறது மருத்துவம். குழந்தைகளோடு பழகும் போது அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளலாம் எனும் சிந்தனையோடு பழக வேண்டும் என்கிறது தத்துவயியல். குழந்தைகளைப் போல மாறினால் மட்டுமே விண்ணகம் என்கிறது ஆன்மிகம்.

சிறு பிள்ளைகள் தேவைகள் அனைத்திற்கும் தந்தையிடம் கேட்கும். தனது விருப்பங்களை அன்னையிடம் முன்வைக்கும். தனக்கு எது தேவையென்றாலும் அதை பெற்றோர் நிறைவேற்ற வேண்டும் என வந்து நிற்கும். தனது இயலாமையை முழுமையாய் ஏற்றுக் கொண்டு தனது பெற்றோரைச் சார்ந்து வாழ்வதே குழந்தைகளின் இயல்பு என்பதே அவ்வசனம் நமக்கு காட்டும் (அருட்)செய்தி.

ஆகவே, பள்ளி வகுப்புகள், தேர்வுகள் என அனைத்திற்கும் தற்காலிக முடிவுரை எழுதியுள்ள நாம், இக்கோடை காலத்தில் நாம் நமது சுயத்தைக் கொஞ்சம் ஒதுக்கி வைத்து விட்டு, மனம் மாறி குழந்தைகளைப் போல, தேவனையே சரணடையும் நிலை நம்மிடம் இருப்பதை உறுதி செய்ய இவ்விதழை வாசிக்க உங்களை அழைக்கிறேன்.

அடித்தாலும் தாயின் முந்தானையை பிடித்துக் கொண்டே அழும் குழந்தையைப் போல, நமது தவறுகளால் நம்மைத் தேவன் தண்டித்தாலும் தேவனின் பாதத்தையே பற்றிக் கொள்ளும் நிலை வேண்டும். குழந்தைகளின் இயல்புகளான கள்ளம் கபடமின்மை, பழி பகை உணர்ச்சியின்மை, கசப்பை மறக்கும் தன்மை என பட்டியலிடும் அனைத்துமே இறை மாட்சியை நாம் வெளிப்படுத்தத் தேவையானவை.

தொடர்ந்து நீங்கள் இவ்விதழை வாசித்ததும் உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்க கொடுங்கள். உங்களை கோடையைத் தொடர்ந்து வரும் வசந்த காலம் உங்கள் மனதில் புத்தெழுச்சியை அளிக்கட்டும் என்று வாழ்த்துகிறேன். வாழ்க!



அன்புடனும், அக்கறையுடனும்:

*அங்கிள்.* **J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை**

# கொம்மட்டிக்காய்
## (தர்பூசணி) (Watermelon)



**நாம் எகிப்திலே கிரயமில்லாமல் சாப்பிட்ட மச்சங்களையும், வெள்ளரிக்காய்களையும், கொம்மட்டிக்காய்களையும், கீரைகளையும், வெண்காயங்களையும், வெள்ளைப்பூண்டுகளையும் நினைக்கிறோம் (எண் 11:5).**

**கொம்மட்டிக்காய்** (Citrullus lanatus) என்பது Cucurbitaceae தாவர குடும்பத்தைச் சேர்ந்த அயல் மகரந்தச் சேர்க்கை கொடி வகை தாவரமாகும். தர்பூசணி Pepo எனும் பெர்ரி வகை குடும்பத்தைச் சார்ந்தது.

தர்பூசணிப் பழம், வத்தகப்பழம், கோசாப் பழம், தர்பீஸ், தண்ணீர்ப் பழம், குமட்டி பழம், தண்ணீர்ப்பூசணி, தரைப்பூசணி ஆகியன இதன் பழத்தின் வேறு பெயர்களாகும். இது வெளிப்புறத் தோல் பகுதி வெளிர் பச்சை, கரும்பச்சை, மஞ்சள், சிலவேளை வெள்ளையாகவும், அதன் உட்புறம் சாறாகவும் இனிப்பான சதைப்பகுதியைக் கொண்டு, சிவப்பிலிருந்து மென்சிவப்பாகவும் சிலவேளை மஞ்சளாகவும், பழுக்காதபோது பச்சையாகவும் காணப்படும். உலகில் இதுவரை 1,600 வகை தர்பூசணிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உலகில் அதிகளவு பயிரிடப்படும் பழம் தர்பூசணி ஆகும்.

தர்பூசணியின் தாயகம் வடக்கு ஆப்பிரிக்கா ஆகும். இன்றளவும் ஆப்பிரிக்கப் பகுதிகளில் இது பெருமளவுக்கு பயிரிடப்படுகிறது. எகிப்து நாட்டில் 5 ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த கல்வெட்டுகளிலும் தர்பூசணியின் தடம் பதிந்திருக்கிறது.

தர்பூசணியின் பிறப்பிடம் ஆப்பிரிக்காவாக இருந்தாலும், இன்று உலகளவில் தர்பூசணி பயிரிடுவதில் முதலிடத்தைப் பிடித்துள்ளது சீனாதான். உலகளவில் 96 நாடுகளில் 1,600



வகையான தர்பூசணிகள் பயிரிடப்படுகின்றன. சீனா மற்றும் ஜப்பான் நாடுகளில் விருந்துக்கு செல்லும் உறவினர்கள், தர்பூசணி பரிசளிப்பதை இன்றளவும் பழக்கமாக வைத்திருக்கிறார்கள்.



இந்தியாவில் தர்பூசணி பயிர் தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திர பிரதேசம், இராஜஸ்தான், மகாராஷ்டிரா, உத்திர பிரதேசம், குஜராத், பஞ்சாப், மத்திய பிரதேசம், ஒடிசா, மேற்கு வங்காளம், அசாம், இமாச்சல பிரதேசம், ஹரியானா ஆகிய மாநிலங்களில் பரவலாக கோடை கால பயிராகவும் பயிரிடப்பட்டு வருகின்றது.

இந்தியாவில் ஏறக்குறைய 25 வணிக வகைகள் உள்ளன. தர்பூசணி கோடை மாதங்களில் வழக்கமாக ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான பருவத்தில் வருகிறது. அதிக அளவு நீர்ச்சத்துடனும், மிகுந்த சுவையுடனும் இருக்கும் தர்பூசணி நம் உடலை போதுமான அளவு நீர் சத்துடன் வைத்திருக்க உதவுகிறது.



தர்பூசணி செடி மிதமான வெப்பம், அளவான ஈரப்பதம், நல்ல சூரிய வெளிச்சம் உள்ள காலங்களில் நன்கு வளரும். பழங்கள் முதிர்ச்சி அடையும் போது அதிகமான வெப்ப நிலை இருத்தல் பழத்தின் இனிப்புச்சுவையை கூட்டிக் கொடுக்கும்.

நிலத்தில் படர்ந்திருக்கும் கொடிகளில் தர்பூசணிகள் வளரும். கொடிகள் நீண்ட கம்பளி முடிகளால் மூடப்பட்டிருக்கும், இது தாவரத்தை அதிக வெப்பத்திலிருந்து பாதுகாக்கிறது. ஒவ்வொரு கொடியிலும் இரண்டு முதல் பதினைந்து பழங்கள் வளரும். தர்பூசணி பூக்கள் மஞ்சள் நிறத்தில் ஐந்து இதழ்களை கொண்டிருக்கும். ஒரே செடியில் ஆண் மற்றும் பெண் பூக்கள் தனித்தனியாக இருக்கும்.



தர்பூசணியின் வகையைப் பொறுத்து பழங்கள் அளவு, வடிவம் மற்றும் நிறத்தில் மாறுபடும். பொதுவாக, தர்பூசணிகள் சுமார் 2 முதல் 18 கிலோ வரை இருக்கும். சிறிய வகைகளின் எடை சுமார் 1.4 முதல் 4.5 கிலோகிராம் வரை இருக்கும்.

சில தர்பூசணி வகைகளில் சிறிய, தட்டையான, கருமையான விதைகள் இருக்கும். விதையற்ற வகைகளில் மென்மையான, வெள்ளை, வளர்ச்சியடையாத விதைகள் உள்ளன. தர்பூசணியின் விதையும் உடலுக்கு மிகவும் நல்லது. அதை வறுத்து உண்ணலாம். இனிப்பு பதார்த்தங்களில், முந்திரி பிஸ்தா போல இந்த விதைகளையும் வறுத்து போடலாம்.



தர்பூசணியில் 92-93% வரை நீர் மட்டுமே உள்ளது. அதனால்தான் இதனை தண்ணீர்பழம் என்று அழைப்பார்கள். தர்பூசணியில் சதைப்பகுதியில் உள்ள சத்தைவிட அதிகளவு அதன் வெண்ணிற அடிப்பகுதியில் உள்ளது. அதை அப்படியே உண்ணலாம். அல்லது கூட்டு போலச் சமைத்தும் சாப்பிடலாம்.



தர்பூசணியில் அதிகளவு இரும்புச் சத்து, வைட்டமின் ஏ, பி, பி6, சி, மெக்னீசியம், பொட்டாசியம் மற்றும் நார்ச்சத்தும் உள்ளது.

**தர்பூசணிப் பழத்தை சாப்பிடுவதால் ஏற்படும் நன்மைகள்:**



உடல் சூட்டைத் தணிக்கும்.

மாரடைப்பு வருவதற்கான வாய்ப்புகளைக் குறைக்கும். இதயத்துடிப்பை சீராக்கும். நெஞ்செரிச்சலை சரிசெய்யும்.

நீர் இழப்பை மட்டுப்படுத்தும்.

மார்பு, நுரையீரல், கர்ப்பப்பை, பெருங்குடல் போன்ற இடங்களில் ஏற்படும் புற்றுநோயைத் தடுக்கும்.

இதயத்தை இளமையாக வைத்துக்கொள்ள உதவும்.

மாலைக்கண்நோய், கண்விழி மிகை அழுத்த நோய் போன்றவற்றிலிருந்து கண்களைப் பாதுகாக்கும்.

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். உயர் ரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும். ஆஸ்துமாவைத் தடுக்கும்.



மனஅழுத்தம், மனச்சோர்வு, பதற்றம் போன்றவற்றை நீக்கும். மனநிலை அமைதியாக, நன்றாக இருக்கும்.

தசை வலிகளைக் குறைக்கும்.

எலும்பைப் பாதுகாக்கும். எலும்பு நோயான ஆஸ்டியோபோரோசிஸைத் தடுக்கும். காயங்களை விரைவாக குணப்படுத்தும்.

சிறுநீரகத்தைப் பாதுகாக்கும்.

மலச்சிக்கலைப் போக்கும். ஆனால், அளவுக்கு அதிகமாகச் சாப்பிட்டால், வயிற்றுப்போக்கு ஏற்படும்.



எடையைக் குறைக்கும்.

இதன் அடிப்பகுதியை தோலில் தடவலாம். இதில் பாக்டீரியாத் தொற்று மற்றும் அலர்ஜிக்கு எதிரான தன்மை உள்ளது. முகப்பரு பிரச்னைக்கும் இது நல்ல தீர்வு தரும்.

கட்டி, வீக்கம் ஏற்படுவதைத் தடுக்கும்.

கோடைக் கொடையான தர்பூசணியை தேவன் படைத்ததற்காக நன்றி சொல்வோம்.

# படத்தை மையப்படுத்தி கவிதை ஒன்றினை 10 வரிகளில் எழுதவும்.



குறிப்பு: படத்தை பார்த்து, பைபிள் சொல்லும் சத்தியத்தை அடிப்படையாக வைத்து 10 வரிகளுக்கு மிகாமல் கவிதை ஒன்றினை எழுதி 2024 மே 20ஆம் தேதிக்குள் எழுதி அனுப்பவும். சிறந்த கவிதைக்கு பரிசும், பாராட்டு சான்றிதழும் வழங்கப்படும். தெரிந்தெடுக்கப்படும் கவிதை அடுத்த ஒலிவ மரக்கன்றுகள் இதழில் பிரசுரிக்கப்படும்.

# அவர் வழி எப்பவும் தனி வழி தான்..



''இதோ
உன் தாய்...''

இயேசு தன் தாயைப் பார்த்தார். அருகிலே நின்றிருந்த தன் சீடர் யோவானைப் பார்த்தார். இயேசுவிடம் மிகவும் நெருக்கமான அன்புடையவர் யோவான். அவர்தான் அன்னையை இங்கே வரவழைத்திருக்க வேண்டும்.

இயேசு தன் தாயை நோக்கி,

'அம்மா...' என்று அழைத்தார்.

தாய் கதறினாள். அவளால் ஏதும் பேச முடியவில்லை. மரணத்தின் விளிம்பில் தொங்கிக் கொண்டிருக்கும் மகனை ஏறிட்டுப் பார்க்கவும் அவளால் முடியவில்லை.

'அம்மா... அதோ உன் மகன்' என்று யோவானை நோக்கிக் கூறினார்.

யோவானை நோக்கி, 'இதோ உன் தாய்...' என்றார்.

யோவான் கண்ணீருடன் தலையாட்டினார். அன்னையின் கரங்களைப் பற்றினார். அந்த வினாடி முதல் அன்னையை யோவான் தன்னுடைய சொந்த அன்னையாகப் பார்த்தார் என்பதை அந்த பற்றிய கரங்கள் பறைசாற்றின. இயேசுவின் இந்த தாய்ப்பாசம் யோவானை பெரும் வியப்புக்குள்ளாழ்த்தியது. எப்போதுமே எதற்குமே கவலைப்படாத இயேசு அன்னையைக் குறித்துக் கவலையடைகிறாரா? தாய்ப்பாசத்தை உலகிற்கு உணர்த்துகிறாரா?

'தாகமாய் இருக்கிறேன்' இயேசுவின் குரல் சிலுவை உச்சியிலிருந்து மெல்லியதாய் விழுந்தது.

படைவீரர்கள் உடனே கடற்காளானைக் காடியிலே தோய்த்து ஒரு ஈட்டியில் குத்தி அவரிடம் நீட்டினார்கள். அவர் அதைக் குடிக்கவில்லை. அவருடைய 'தாகமாயிருக்கிறேன்' என்னும் வார்த்தையின் பொருளை உணர்ந்து கொள்ளுமளவுக்கு படைவீரர்கள் பக்குவமடைந்திருக்கவில்லை.

காலை ஒன்பது மணியளவில் சிலுவையில் அறையப்பட்ட இயேசு பிற்பகல் மூன்று மணிவரை சிலுவையில் தொங்கினார்.

மூன்று மணியளவில் இயேசு உரத்த குரலில் கத்தினார்.

'எலோயீ.. எலோயீ... லாமா சபக்தானி...' என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்? என்பதே அதன் பொருள். சிலுவையின் கீழ் அதைக் கேட்டுக் கொண்டிருந்த இயேசுவின் சில ஆதரவாளர்கள் கண்ணீர் விட்டார்கள்.

படைவீரர்களோ சிரித்தார்கள்.

'ஏய்.. இவன் தீர்க்கதரிசி எலியாவைக் கூப்பிடுகிறானா?'

'ஒருவேளை எலியா வந்து இவரைக் காப்பாற்றுவாரோ?'

'பார்ப்போம்... ஒருவேளை ஏதாவது சுவாரஸ்யம் நிகழலாம்...'

அன்னாவும் காய்பாவின் காதுகளிலும் இந்த வார்த்தைகள் விழுந்தன. காய்பா அன்னாவை நோக்கிச் சிரித்தான்.

'பாருங்கள்... இவன் தான் தேவகுமாரன் என்றான், பிறகு இவனே தேவன் என்றான். இப்போது தேவனே என்னை ஏன் கைவிட்டீர் என்கிறான்!... இவன் ஒரு பைத்தியக்காரன் தான்' காய்பா சத்தமாய்ச் சிரித்தான். சரியான தீர்ப்பைத் தான் வழங்கியிருக்கிறோம் என்று அவனுடைய மனசு அவனை சமாதானப்படுத்தியது.

அன்னா காய்பாவைப் பார்த்தான்.

‘காய்பா… உனக்கு மூளை மழுங்கிவிட்டதா? பரிசுத்த வேதாகமம் சொல்லியிருக்கும் தீர்க்கத்தரிசனங்கள் நிறைவேறுகின்றன. நீ சிரிக்கிறாயே?’ அன்னாவின் குரல் நடுங்கியது.

‘என்ன சொல்கிறீர்கள்?’ காய்பாவின் சிரிப்பு சட்டென்று காணாமல் போயிருக்க குரலில் பதட்டமிருந்தது.

‘சங்கீதம் 22:1ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ‘‘என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?’’ அந்த தீர்க்கத்தரிசனம் இன்று இங்கே நிறைவேறியிருக்கிறது போல் தெரிகிறது.. அப்படியானால்…’ அன்னா இழுத்தார்.

‘தலைவரே… நீங்கள்…’

‘நான் வீட்டுக்குப் போகிறேன்…’ அன்னா நிற்காமல் விரைந்தார். காய்பா குழப்பத்தில் விழுந்தான்.

‘பிதாவே… உமது கைகளில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்’ இயேசு உரத்த குரலில் மீண்டும் கத்தினார். அதைச் சொன்னதும் இயேசுவின் தலை சாய்ந்தது.


இயேசு உயிர்விட்டார்!


தொடரும்…

---



# குரங்கு அண்ணே!!!





குரங்கு அண்ணனின் படத்தைப் பார்த்து நீங்களே வரையுங்கள் குழந்தைகளே.

# அவனா நீ?

மதிய வெயில் நேரத்தில் வெட்டுக்கிளி ஒன்று இங்கும் அங்கும் குதித்து பாட்டுப்பாடி ஆடிக்கொண்டிருந்தது.

அப்போது எறும்பு ஒன்று அரிசி ஒன்றை எடுத்துக்கொண்டு அதே பாதையில் தன் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தது. அதைப் பார்த்த அந்த வெட்டுக்கிளி எறும்பிடம் ‘‘இப்போது என்ன அவசரம். சிறிது நேரம் என்னைப்போல நீயும் என்னுடன் விளையாடலாமே’’ என்றது.

அதற்கு எறும்பு ‘‘இன்னும் சில நாட்களில் வெயில் காலம் முடிந்து, மழைக்காலம் தொடங்கப்போகிறது. மழைக்காலத்தில் எவரும் வெளியே செல்லமுடியாது. அதனால் அந்த நேரத்திற்குத் தேவையான உணவை இப்போது இருந்தே நான் என் வீட்டில் சேகரித்து வைத்துக்கொள்கிறேன்’’ என்றது.

வெட்டுக்கிளி எறும்பிடம் ‘‘மழைக்காலம் வர இன்னும் நாட்கள் இருக்கின்றன, நான் விளையாட செல்கிறேன்’’ என்று சிரித்துகொண்டே நடனமாடி சென்றது.

நாட்கள் கடந்தன. மழைக்காலமும் வந்தது.

தான் சேகரித்த உணவை உண்டு தன் வீட்டிலே எறும்பு இருந்தது.



ஆனால், அந்த வெட்டுக்கிளிக்கோ உணவு ஏதும் கிடைக்காமல் உணவு தேடி மழையில் சுற்றித்திரிந்தது.

அப்போது வெட்டுக்கிளிக்கு ''எறும்பு உணவு சேகரித்து வைத்து இருக்கும். அதனிடம் கேட்டுப் பார்க்கலாம்'' என்ற எண்ணம் வந்தது.

வெட்டுக்கிளி எறும்பின் வீட்டிற்கு வந்து எறும்பிடம் ''எனக்கு மிகவும் பசிக்கிறது. ஏதாவது உணவு கிடைக்குமா?'' என்று கேட்டது.

தன்னிடமிருந்த சேகரித்த உணவில் இருந்து சிறிதளவை வெட்டுக்கிளியிடம் கொடுத்த எறும்பு, ''அன்று என்னைப் பார்த்து சிரித்தாயே. இப்போது நான் சேகரித்த உணவு தான் இன்று நாம் இருவருக்கும் உதவியது. இனி நீ எப்போதும் சோம்பலில்லாமல், வெயில் காலத்தில் மழைக்காலத்திற்கு வேண்டியதை சேமித்துக்கொள்'' என்றது.

கால நேரம் பாராது உழைத்தால் வாழ்வு பிரகாசிக்கும் என்று வெட்டுக்கிளி உணர்ந்தது.

''சோம்பேறியே, நீ எறும்பினிடத்தில் போய், அதின் வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக்கொள். அதற்குப் பிரபுவும், தலைவனும், அதிகாரியும் இல்லாதிருந்தும், கோடைகாலத்தில் தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்து, அறுப்புக்காலத்தில் தனக்குத் தானியத்தைச் சேர்த்துவைக்கும்'' (நீதிமொழிகள் 6:6-8)

பூமியில் அற்பமான ஜெந்துவாயிருந்தும், கோடைகாலத்திலே தங்கள் ஆகாரத்தைச் சம்பாதிக்கிற எறும்பு மகா ஞானமுள்ளது (நீதிமொழிகள் 30:25). இவ்வசனங்களில் எறும்பின் ஞானம் குறித்தும், அதன் கடின உழைப்பைக் குறித்தும் தெரிந்து கொள்ளலாம் குழந்தைகளே.

**கடின உழைப்பு உடனடியாகப் பலன் தராவிட்டாலும் என்றாவது ஒருநாள் கண்டிப்பாக பலன் தரும்.**



# மந்தியாகிய நான்...



''ராஜாவுக்குச் சமுத்திரத்திலே ஈராமின் கப்பல்களோடேகூடத் தர்ஷீசின் கப்பல்களும் இருந்தது; தர்ஷீசின் கப்பல்கள் மூன்று வருஷத்துக்கு ஒருதரம் பொன்னையும், வெள்ளியையும், **யானைத்தந்தங்களையும்,** குரங்குகளையும், மயில்களையும் கொண்டுவரும் (1இராஜாக்கள் 10:22)'' என குரங்குகளைக் குறித்து வாசிக்கலாம்.

**குரங்கு (Monkey)** ஒரு பாலூட்டி விலங்காகும். உலகின் அனைத்து கண்டங்களிலும் அவை வாழ்கின்றன. குரங்குகள் மிகவும் சுறுசுறுப்பான மற்றும் புத்திசாலி விலங்குகள்.

பெரும்பாலான குரங்குகள் மரங்களில் வாழ்கின்றன. குரங்குகள் பொதுவாக மரங்கள், புல்வெளிகள், பசுமையான வயல்வெளிகள், மலைகள், உயரமான சமவெளிகள், மரங்கள் மற்றும் காடுகளில் வாழ்கின்றன. அவைகள் விரைவாக ஒரு மரத்தில் ஏற முடியும், மேலும் ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்திற்கு எளிதில் தாவவும், தரையைத் தொடாமல் மரங்களுக்கு கிளைகள் வழியாக மைல்கள் வேகமாகப் பயணிக்கவும் முடியும். அவைகள் இரவு முழுவதும் மரங்களுக்கு மேல் படுத்துக் கொள்கின்றன. குரங்குகள் கூட்டமாக வாழும் ஒரு குடும்ப உயிரினம். குரங்குகள் 30 முதல் 40 ஆண்டுகள் வரை உயிர் வாழும். 15-17 மணி நேரம் தூங்கும்.

உலக அளவில் 264 வகை குரங்குகள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை.

குரங்கு, முதனி, சோலை மந்தி, பனி மந்தி, சிறு குரங்கு, தாட்டான் குரங்கு, மந்தி குரங்கு, இலை குரங்கு, அணில் குரங்கு, ஒராங்குட்டான், கருங்கால் சாம்பல் குரங்கு, குக்குரங்கு, வடவெளிச் சாம்பற் குரங்கு, குல்லாய் குரங்கு, சுள்ளிய சாம்பல் குரங்கு, செங்குரங்கு, செம்முகக் குரங்கு, சைச்சின் குரங்கு, தங்க நிற மந்தி, சோலைமந்தி, துள்ளுகுரங்கு, தென்வெளிச் சாம்பல் குரங்கு, தேவாங்கு, வெண்தலைக் கப்புசின், நண்டு உண்ணும் குரங்கு, நீலகிரி மந்தி, நேபாளச் சாம்பல் குரங்கு, பெரிய தேவாங்கு, பேய்க்குரங்கு, பேரரசர்

சிறு குரங்கு, போர்னியோ ஒராங்குட்டான், மங்கிய இலைக் குரங்கு, மிஸ் பேக்கர், லெகூலா, ஹூலக் கிப்பான் இது போன்ற பலவகையான குரங்கு இனங்கள் உள்ளன.

உலகின் மிகச்சிறிய குரங்கு ஒரு 'பிக்மி மார்மோசெட்' ஆகும், இந்த மர்மோசெட் குரங்குக்கு மட்டும் தனி மரியாதைதான். இது அரியவகைக் குரங்கு. தென் அமெரிக்கக் கண்டத்தில்தான் இந்தக் குரங்குகள் காணப்படுகின்றன. பொலிவியா, பெரு, பிரேசில், கொலம்பியா போன்ற நாடுகளிலேயே இது காணப்படுகிறது. இந்தக் குட்டிக் குரங்குகள் சாவிக்கொத்துபோல உள்ளங்கையில் அடங்கிவிடுகின்றன. இது சுமார் 5 அங்குல உயரமும் 113 கிராம் எடையும் கொண்டது. 3 அடி உயரமும் 35 கிலோ எடையும் கொண்ட 'மாண்ட்ரில்ஸ்' தான் உலகின் மிகப்பெரிய குரங்கு.

நாட்டுக்குரங்கு வயல்வெளி, கோயில் பகுதி மற்றும் கிராமப்பகுதியில் அதிகமாகக் காணப்படும். பொதுவாகத் தென்னிந்தியா முழுவதும் இவை காணப்படும். இதன் சினைக்காலம் 6 மாதங்களாகும். இவை சுமார் 8 வருடங்கள் வரை உயிர்வாழும்.

தென்வெளிச் சாம்பல் மந்தி என்பது ஒரு பழைய உலக குரங்காகும். மற்றைய சாம்பல் மந்திகளைப் போலவே இவையும் இலை உண்ணும் குரங்காகும். இவை தென்மேற்கு மற்றும் மத்திய மேற்கு இந்தியாவில் காணப்படுகின்றன. இவை பெரும்பாலும் கூட்டமாகவே வாழ்கின்றன. கூட்டமாகவே உண்ணும் பழக்கம் கொண்டவை.

குரங்குகளில் காணப்படும் சிம்பன்சி இனமானது மிகவும் உணர்திறன் கொண்ட இனமாகக் கருதப்படுகிறது.

பழங்கள், இலைகள், தானியங்கள், கொட்டைகள், பூக்கள், பூச்சிகள், சிலந்திகள், முட்டைகள், அக்ரூட் பருப்புகள், பெர்ரி, பிற சிறு உயிரினங்களைக் குரங்குகள் உண்கின்றன. அதன் விருப்பமான பழம் வாழைப்பழம். வாழைப்பழத்தை உரித்து உண்ணக்கூடிய ஒரே விலங்கு குரங்கு மட்டுமே.

குரங்குகளுக்கு வலுவான மூளை உள்ளது. ஒரு குரங்குக்கு மொத்தம் நான்கு கால்கள் உள்ளன. பின் இரு கால்களை கால்களாகவும், முன் இரு கால்களை கைகளாகவும் பயன்படுத்துகின்றன. குரங்குகள் தங்கள் வலிமையான வாலின் உதவியுடன் நீண்ட நேரம் மரங்களில் தலைகீழாகத் தொங்குகின்றன. குரங்கின் வால் வெவ்வேறு இனங்களில் வெவ்வேறு அளவுகளில் உள்ளது. ஒரு சில வகை குரங்குகளால் மட்டுமே வண்ணங்களை வேறுபடுத்தி பார்க்க முடியும்.

குரங்குகள் உலகின் மிகவும் புத்திசாலி விலங்கு. குரங்குகள் மனித கட்டளைகளுக்கு திறம்பட பதிலளிக்கின்றன. குரங்குகள் மற்ற விலங்குகளை விட சிறப்பு பண்புகளைக் கொண்டுள்ளன. குரங்குகள் மனிதர்களை மிக எளிதாக நகலெடுப்பதில் மிகவும் திறமையானவை. குரங்குகளின் கைகள் மனிதர்களின் கைகளைப் போன்றது, அதற்கு கைரேகைகளும் உள்ளன. குரங்குகளுக்கும் காசநோய் வரும். எண்களை அடையாளம் காணும் ஆற்றல் அவர்களுக்கு உண்டு. மனிதர்களைப் போலவே குரங்குகளுக்கும், எண்ணவும் கணக்கு போடவும் தெரியும் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

விண்வெளிக்குச் சென்ற ஒரே விலங்கு குரங்கு மட்டுமே. 'ஆல்பார்ட் 2' என்று பெயரிடப்பட்ட குரங்கு 1949-ம் ஆண்டில் முதல்முறையாக நியூ மெக்ஸிகோவின் ஒயிட் சாண்ட்ஸில் இருந்து விண்ணுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் மூச்சுத் திணறல் காரணமாக இறந்தது. ஜப்பானில், குரங்குகளுக்கு பணியாளர்களாக பயிற்சி அளிக்கப்படுகிறது, எனவே அவை வெயிட்டர்களாக வேலை செய்கின்றன. சீனா, மலேசியாவில் குரங்குகளின் மூளைக் கறியை சாப்பிடுகின்றனர்.

அதிசயப் படைப்பான குரங்கு இனங்கள் அழிந்து வருகின்றன. குரங்குகளின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.

## தாய் குரங்கு அழுகின்ற தன் குட்டியிடம் செல்ல சரியான வழிகாட்டுங்கள்.



# உலகின் முதல் சுனாமி



அதன் மத்தியிலும் நோவா உயரமான ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து, தனது சத்தத்தை உயர்த்தி ''என் அன்பான மக்களே, எல்லோரும் என்னை கவனியுங்கள். நான் பேசப்போகும் வார்த்தைகளுக்கு உங்கள் செவிகளை கூர்மையாக்கிக் கேளுங்கள். மிகவும் முக்கியமான தகவலை உங்களுக்கு நான் சொல்லப் போகிறேன்'' என்று சொன்னதும் ஒரு சிலர் அவன் என்ன சொல்லப்போகிறான் என்று கவனித்தாலும், மற்றவர்கள் அவனை ஒரு பொருட்டாகக் கூட மதிக்காமல் தங்கள் வேலையை கவனித்துக்கொண்டிருந்தார்கள்.

''நான் சொல்லப்போகிற தகவல்கள் உங்களுக்கு விகற்பமாக தெரியலாம். ஆனால் நான் சொல்லப் போகும் செய்திகள் அனைத்தும் உண்மை. இன்னும் சில நாட்களுக்குள்ளாக இந்தப் பூமி தண்ணீரினால் அழிக்கப்படப்போகிறது. வானத்திலிருந்து பெரும் மழை வரும். தொடர்ந்து பெய்யப்போகும் மழையினால், பெரும் வெள்ளப்பெருக்கு உண்டாகும். அப்படி வெள்ளப்பெருக்கு ஏற்படும் பொழுது நிலப்பரப்பு முழுவதும் தண்ணீர் சூழ்ந்து கொள்ளும். அது மட்டுமல்ல, அந்த வெள்ளம் எல்லா மலை உச்சிகளையும் மூடிவிடும். ஆதலால் நான் சொல்லப்போகும் செய்தியைக் கவனியுங்கள்'' என்று நோவா பேச, அதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் பலத்த சத்தத்துடன் கூச்சலிட ஆரம்பித்தனர்.

அது மட்டுமல்ல, அந்த வெள்ளம் எல்லா மலை உச்சிகளையும் மூடிவிடும். ஆதலால் நான் சொல்லப்போகும் செய்தியைக் கவனியுங்கள்'' என்று நோவா பேச, அதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் பலத்த சத்தத்துடன் கூச்சலிட ஆரம்பித்தனர்.

கூட்டத்திலிருந்த ஒருவன் ''என்ன நோவா உனக்கு பைத்தியம் பிடித்துவிட்டதா? ஏன் இப்படி உளறிக்கொண்டிருக்கிறாய். மழையாவது மண்ணாவது.



அப்படி என்றால் என்ன? உனக்கு மூளை குழம்பிவிட்டது என்று நினைக்கிறேன்'' என்று எள்ளி நகையாட, சுற்றி இருந்த அனைவரும் ''பைத்தியகாரனின் பேச்சை எல்லாம் கேட்டு நேரத்தை வீணடிக்காமல் வேலையைப் பாருங்கப்பா'' என்று தலையில் அடித்துக் கொண்டனர்.

''நண்பர்களே தயவு செய்து நான் சொல்வதை நம்புங்கள். இது என்னுடைய வார்த்தைகள் அல்ல. தேவன் என்னிடம் சொன்ன வார்த்தைகளையே நான் உங்களிடம் சொல்லுகிறேன்'' என்றான் நோவா. கூட்டத்தில் இருந்த இன்னொருவன் ''என்ன நோவா அடிவாங்காமல் இங்கிருந்து போகமாட்டாய் என்று நினைக்கிறேன். எந்த தேவன் உன்னிடத்தில் சொன்னது. அந்த தேவனை என்னிடத்தில் வந்து சொல்லச்சொல், நான் அந்தக் தேவனிடத்தில் பேசிக்கொள்கிறேன்'' என்று சொல்ல சுற்றியிருந்த எல்லோரும் சத்தமாக கேலி செய்து சிரித்தனர்.

மறுபடியும் நோவா ''நான் சொல்லுவதை நீங்கள் நம்பினாலும் நம்பாமல் போனாலும், கட்டாயமாக வானத்தில் இருந்து மழைவரும். வெள்ளப்பெருக்கு ஏற்படும். பூமி தண்ணீரினால் சூழப்பட்டு எல்லாம் அழிக்கப்படும். இந்த அழிவில் இருந்து தப்பித்துக்கொள்ள வேண்டுமானால் நான் செய்யப்போகிற பேழைக்குள் நீங்கள் வரவேண்டும். நான் சொல்லுவதைச் சொல்லிவிட்டேன். இனி உங்கள் விருப்பம்'' என்று சொல்லி அங்கிருந்து நடக்க ஆரம்பித்தான்.

நோவாவின் காதுபடவே ஒருவன் ''நோவா நீ பைத்தியமாகி விட்டாய். குணமாக வேண்டுமானால், நல்ல வைத்தியரை சென்று பார். இன்னும் பைத்தியம் அதிகமாகி விடப்போகிறது'' என்று பின்னாலேயே வந்து நோவா அணிந்திருந்த உடைகளை பிடித்து இழுத்தான். நோவா அவனுடைய கையை நீக்கிவிட்டு அமைதியாக சென்றான்.

ஆனாலும் நோவா சும்மா இருக்கவில்லை. மக்கள், தன் பேச்சைக் கேட்காமல் கேலி பேசினாலும், தான் பார்க்கிற எல்லா மனிதர்களிடமும் தேவன் சொன்னவைகளை சொல்லிக்கொண்டே வந்தான்.

தன்னுடைய நண்பர்களையும் அடிக்கடி சந்தித்து ''தேவன் தன்னிடம் பேசிய வார்த்தைகளை சொன்னான். அவனுடைய நண்பர்கள் அவன் சொல்லுவதை பொறுமையாக கேட்டார்கள். ஆனால் அநேக கேள்விகள் கேட்டு, அதை மறுக்க பார்த்தார்களே தவிர ஏற்றுக்கொண்டு, பேழை செய்வதற்கு உதவி செய்யவோ, நோவா சொன்ன வார்த்தைகளை கேட்டு, பேழைக்குள் ''நாங்களும் வருகிறோம்'' என்றோ ஒருவரும் சொல்லவில்லை. மாறாக ''மழையா? வெள்ளமா? அழிவா? நீயும் இதை வெகு நாட்களாக சொல்லிக்கொண்டுதான் இருக்கிறாய். ஒரு மாறுதலும் இல்லையே, அப்படி வரும் பொழுது பார்த்துக்கொள்ளலாம்'' என்று கேலி பேசினார்கள்.

நாட்கள் உருண்டோடின. நோவா பேழையை செய்து கொண்டே, அதற்கு தேவையான பொருள்களை சேகரித்துக்கொண்டே இருந்தான். இந்த வேலையின் மத்தியிலும், தன்னால் முடிந்தவரை எல்லா மக்களுக்கும் பூமி தண்ணீரினால் அழியப்போகிறது என்ற செய்தியை பகிரங்கமாக அறிவித்துக்கொண்டே இருந்தான்.

நோவாவின் குடும்பம் மட்டுமே நோவாவிற்கு உறுதுணையாக இருந்து பேழை கட்டுவதற்கு அவனுக்கு உதவி செய்து வந்தது. மற்றவர்கள் எல்லாம் நோவாவை அடிக்காத குறைதான். அநேகர் தகாத வார்த்தைகளால் பேசி, வேதனைப்படுத்தினார்கள். ஆனாலும் நோவா அதைப் பெரிதாக எண்ணாமல், ஒருவரிடமும் கோபம் கொள்ளாமல், உண்மைநிலை அறியாமையால் மக்கள் இப்படி எல்லாம் நடந்து கொள்கிறார்கள் என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டான்.

தேவன் சொன்னபடியே நோவா பேழையை கட்டி முடித்தான். முழுவதும் கட்டி முடிக்க 100 ஆண்டுகள் ஆனது. அப்பொழுது கர்த்தர் நோவாவிடம் மறுபடியும் பேசினார். ‘நோவா, நீ உன் குடும்பத்தார் அனைவரோடும் பேழைக்குள் செல். இத்தலைமுறையில் உன்னையே நான் நேர்மையானவனாகக் காண்கிறேன்’ என்றார்.

நான் சொல்லியபடி நாட்டு விலங்குகள் எல்லாவற்றிலிருந்தும் ஆணும் பெண்ணுமாகவும், காட்டு விலங்குகளிலிருந்து ஆணும் பெண்ணுமாக ஒரு சோடியையும், வானத்துப் பறவைகளிலிருந்து ஆணும் பெண்ணுமாகவும், மண்ணுலகெங்கும் அவற்றின் இனங்கள் உயிர்பிழைத்துக் கொள்வதற்காக உன்னுடன் சேர்த்துக் கொள். இன்னும் ஏழு நாட்களில் மண்ணுலகின்மேல் நாற்பது பகலும், நாற்பது இரவும் நான் மழையைப் பொழியப்போகிறேன். நான் உருவாக்கிய உயிரினங்களை எல்லாம் இந்த நிலத்திலிருந்து அழித்தொழிப்பேன்’’ என்றார். தேவன் சொன்னபடியே நோவா ஏழு நாட்களுக்குள்ளாக மிகவேகமாக செயல்பட ஆரம்பித்தான்.

தேவன் அழிக்கப்போகிறேன் என்று சொன்ன கடைசி நாட்கள் வந்துவிட்டதை அறிந்த நோவா, கர்த்தர் சொன்னபடியே விலங்குகளையும், பறவைகளையும், சேகரித்துக்கொண்டே, மறுபடியும் கண்ணீரோடுகூட பார்க்கிற எல்லா மக்களிடத்திலும் ‘‘இன்னும் சில தினங்கள் மட்டுமே இருக்கின்றன. மழைவரப்போகிறது. வெள்ளப்பெருக்கு உண்டாகும். பூமி முழுவதும் நீரால் அழிந்து போகும். இப்போதாவது என்னுடைய வார்த்தைகளுக்குச் செவி சாய்த்து, மனந்திரும்பி நான் கட்டிய பேழைக்குள்ளாக வாருங்கள். பேழைக்குள் வந்துவிட்டால் உங்களுக்கு அழிவில்லை’’ என்று தன்னால் முடிந்த மட்டும் எல்லோரிடமும் சொல்லிப்பார்த்தான். ஆனால் ஒருவராகிலும் அவனுடைய வார்த்தைக்கு செவி சாய்த்து, மனம் திரும்பி வருவதாக இல்லை.

தேவன் சொன்ன அந்த கடைசி நாளும் வந்தது. தேவன் சொன்னபடியே அந்த ஏழு நாட்களுக்குப்பின் பூமியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. நோவாவின் வாழ்க்கையின் அறுநூறாம் ஆண்டின் இரண்டாம் மாதத்தில் பதினேழாம் நாளன்று பேராழத்தின் ஊற்றுகள் எல்லாம் பீறிட்டெழுந்தன. கடல் கொந்தளித்தது. வானங்களின் மதகுகள் திறக்கப்பட்டன. நாற்பது பகலும், நாற்பது இரவும் பூமியில் பெரு மழை பெய்ய ஆரம்பித்தது.

தொடரும்...

---

**சொல்லறிவோம்:** மந்தி என்பது பெண் குரங்கினையும், கடுவன் என்பது ஆண் குரங்கினையும் குறிக்கும்.



# நோவாவின் பேழை

**ஆதியாகமம் 5:29 - 9:17 படித்து கேள்விகளுக்கு விடையளியுங்கள்.**

1. நோவாவின் தந்தையின் பெயர் என்ன?
2. தேவன் நோவாவிடம் செய்த உடன்படிக்கையின் அடையாளம் என்ன?
3. நோவாவின் பேழை எந்த பொருளால் தயாரிக்கப்பட்டது?
4. பேழையில் எத்தனை ஜன்னல்கள் இருந்தன?
5. எத்தனை சுத்தமான ஜோடி விலங்குகளை நோவா பேழைக்குள் கொண்டு போனார்?
6. நோவாவிற்கு எத்தனை வயதான போது வெள்ளம் தொடங்கியது?
7. வெளியே விடப்பட்ட புறா நோவாவிடம் ஏன் திரும்பி வந்தது?
8. எந்த மலையில் நோவாவின் பேழை தங்கிற்று?
9. பேழையிலிருந்து வெளியே வந்த நோவா என்ன கட்டினான்?
10. நோவாவின் பேழையின் அளவு என்ன?

விடைகள் 21ஆம் பக்கம் பார்க்க

# விசுவாசம் (Faith)


## நடந்தது என்ன?

சென்ற இதழின் தொடர்ச்சி...

ஏஜியேட்ஸ் எரிச்சலடைந்தான்.

ஆனாலும் எதுவும் பேசாமல் அப்போது அவரை விடுவித்தான். அந்திரேயா தொடர்ந்து பணி செய்தார். அந்திரேயா நிறைய தீர்க்கத்தரிசனங்கள் சொன்னார். சிறையில் மத்தியாஸ் அடைக்கப்பட்ட போது உருக்கமாக ஜெபித்தார். அவருடைய ஜெபத்தினால் சிறையில் அவரைக் கட்டியிருந்த சங்கிலிகள் உடைந்து தெறித்தன.

ஆள்பவர்களின் கோபமும் மக்கள் கோபமும் அந்திரேயா மீது திரும்பியது. அவர்கள் அந்திரேயாவை அடித்து உதைத்தனர். அவருடைய பற்கள் உடைந்து தெறித்தன. அவர்கள் அவருடைய விரல்கள் சிலவற்றை வெட்டி எறிந்தனர். அவரைக் குற்றுயிராக்கி ஒரு மலைச்சரிவில் எறிந்தார்கள்.



மலைச்சரிவில் கிடந்த மனிதருக்கு இயேசு தரிசனமானார்!! அவருடைய காயங்களை ஒரே நாளில் ஆற்றினார். மறுநாள். மக்கள் முன்னிலையில் மீண்டும் தோன்றினார் அந்திரேயா! அதே பழைய உற்சாகத்துடன். மக்கள் அதிர்ந்தார்கள். இப்படி அடித்துப் போட்ட எந்தவொரு மனிதனும் பிழைத்து வந்ததாக வரலாறு இல்லையே என்று நடுங்கினார்கள்.

ஒரு முறை ஒரு பெண் தன்னுடைய ஒரே மகனை மரண கோலத்தில் பார்த்து கதறிக் கொண்டிருந்தாள். அந்திரேயா அங்கே வந்தார்.

'நான் இவனை உயிர்ப்பித்தால் நீங்கள் இயேசுவை நம்புவீர்களா?' அவர் கேட்டார். அந்த சூழ்நிலையில் யார் தான் இல்லை என்று சொல்வது. அவள் ஆம் என்று கதறினாள்.

அந்திரேயா அவனைத் தொட்டார். 'இயேசுவின் பெயரால் சொல்கிறேன் எழுந்திரு' என்றார். இறந்தவன் எழுந்தான். சுற்றி நின்றவர்கள் பயத்தில் விழுந்தனர். இதே போல் எங்கும் கண்டதில்லையே என்று பயந்தனர்.

நிலைமை கட்டுக்குள் அடங்காமல் போய்க்கொண்டிருப்பதைக் கண்ட ஏஜியேட்ஸ் அந்திரேயாவைக் கொல்வதைத் தவிர வேறு வழியில்லை என்று முடிவெடுத்தான். அந்திரேயா பிடிக்கப்பட்டார். அவருக்கு விசாரணையில்லாமலேயே தீர்ப்பிடப்பட்டது.

மரண தண்டனை! அதுவும் சிலுவை மரணம்.

அந்திரேயா X வடிவ சிலுவையில் அறையப்படவேண்டும் என்று தீர்ப்பானது. X வடிவ சிலுவையில் தலைகீழாக அறையப்பட்டால் தரையையும், மக்களையும் பார்க்க முடியாமல் வானத்தை மட்டுமே பார்த்துக் கொண்டிருக்க வேண்டிவரும். அது சிலுவையில் இருப்பவரை அதிக வேதனையடையச் செய்யும் என்பதும். தலைகீழாக X வடிவ சிலுவையில் தொங்கினால் மரணம் நிகழ அதிக நேரமாகும், வலியும் அதிகமாகும் என்று பல்வேறு ஆலோசனைகளுக்குப் பிறகு அந்திரேயாவுக்கு சிலுவை மரணம் தீர்ப்பானது.

அந்திரேயா சிலுவையில் அறையப்பட்டார். அந்திரேயாவின் மரணம் ஊரெங்கும் பரவியது. இரண்டு நாட்கள் சிலுவையில் தொங்கிய அந்திரேயா விடாமல் மக்களுக்குப் போதித்துக் கொண்டே இருந்தார். மாபெரும் மக்கள் எழுச்சி அரசுக்கு எதிராக எழும்புவதை அறிந்த மன்னன் அந்திரேயாவை சிலுவையிலிருந்து இறக்கி விடவேண்டுமென்று விரும்பி சிலுவையை நெருங்கினான்.

மன்னன் வீரர்களுக்கு ஆணையிட்டான். அந்திரேயாவை சிலுவையிலிருந்து இறக்குங்கள். வீரர்கள் அந்திரேயாவின் சிலுவையை நெருங்க அவர்களின் கைகள் மரத்துப் போயின. அவர்களால் எதுவும் செய்ய இயலவில்லை. மன்னன் பயந்தான். மக்கள் வியந்தார்கள்.

அந்திரேயா இறந்தபோது காலம் கிபி 69, நவம்பர் முப்பதாம் நாள். ஏஜியேட்டசின் மனைவி மேக்ஸ்மில்லாவும், அவரது சகோதரன் ஸ்ராட்டோகிலிஸ்-ம் அந்திரேயாவை சிலுவையிலிருந்து இறக்கி அடக்கம் செய்தார்கள். அந்திரேயா அடக்கம் செய்யப்பட்ட இடத்துக்கு மக்கள் குவிய ஆரம்பித்தார்கள். சிலர் குணமும் அடைந்ததாக செய்திகள் பரவ மக்கள் ஏராளமாக அவருடைய அடக்க இடத்தை மொய்த்தார்கள்.

மக்களின் மனமாற்றம் மன்னன் ஏஜியேட்டசை வருத்தியது. தவறு செய்துவிட்டோம் என்ற குற்ற உணர்வு குத்த, அவன் தற்கொலை செய்து கொண்டான். கி.பி 357ம் ஆண்டு கான்ஸ்டண்டன் மன்னன் அந்திரேயாவில் உடல் எலும்புகளை மட்டும் எடுத்து பைசாண்டியத்திலுள்ள தூய அப்போஸ்தலர் தேவாலயத்தில் வைத்தார். அவருடைய உடல் எலும்புகளின் ஒருபாகம் ஸ்காட்லாந்து தேசத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. கபாலம் ரோமுக்கு கொண்டு செல்லப்பட்டது.

1967ம் ஆண்டு அந்திரேயாவின் கபாலம் மீண்டும் பட்ரேஸ் திருச்சபைக்கு திரும்ப அளிக்கப்பட்டது. அவர் ஸ்காட்லாந்து தேசத்தின் புனித தந்தையாகப் போற்றப்படுகிறார். ஸ்காட்லாந்தும், இங்கிலாந்தும் இணைந்தபின், இங்கிலாந்து தேசக் கொடி அவருடைய X வடிவ சிலையை தன்னுடைய தேசியக் கொடியில் பொறித்து பெருமைப்படுத்தியது.

அச்சம் என்பது மடமையடா!

---

19ஆம் பக்கத்து விடைகள்

## நோவாவின் பேழை - பதில்கள்

1. லாமேக்கு, 2. வானவில், 3. கொப்பேர் மரம், 4. ஒரு ஜன்னல், 5. எவ்வேழு ஜோடு, 6. அறுநூறாம் வயது, 7. இளைப்பாற இடம் இல்லாததால், 8. அரராத், 9. பலிபீடம் 10. பேழையின் நீளம்: 300 முழம், அகலம்: 50 முழம், உயரம்: 30 முழம்

படத்தின் மைய பொருளை உள்ளடக்கிய வசனத்தை வேதாகமத்திலிருந்து கண்டறிந்து எழுதவும்.











# இதுதான்டா சர்ஜிக்கல் ஸ்டிரைக்
## (துல்லிய தாக்குதல்)





நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். - ரோமர் 5:8




சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களைவிட்டு நீங்கக்கடவது. ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். - எபேசியர் 4:31-32




எங்களால் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி, தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே. 2 கொரிந்தியர் 1:20




தேவவசனம் தூஷிக்கப்படாதபடிக்கு பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும்படி, அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர்களுமாயிருக்கவும் முதிர்வயதுள்ள ஸ்திரீகளுக்குப் புத்திசொல்லு. - தீத்து 2:4-5



# குழவிகள் எனும் குழந்தைகள்

இந்த வார்த்தையே நமது மன வெளிகளில் புன்னகை விதைகளைத் தூவும் வல்லமை படைத்தது. எத்தனை பெரிய சோகத்தின் அலைகள் நமது பாலை வெளிகளில் புரண்டு படுத்தாலும், ஒரு சின்னக் குழந்தையின் புன்னகைக் கைக்குட்டை கிடைத்தால் அந்த சோகம் புதையுண்டு போய்விடும். மழலைகளோடு விளையாடுகையில் மலைபோன்ற மன பாரங்கள் கூட பழுத்த இலை போல உதிர்த்து பறந்து மறையும்.

குழந்தைகள் வாழ்வில் இருளான தாழ்வாரங்களை புன்னகைத் தூரிகை கொண்டு வெள்ளையடிக்கப் பிறந்தவர்கள். வாழ்வின் அழுக்கான சுவர்களைத் தங்கள் ஆனந்தக் கிறுக்கல்களால் புதுப்பிப்பவர்கள். அவர்கள் விண்ணகத்தின் விழுதுகள், மண்ணகத்தின் விருதுகள்.

குழந்தைகள் மீதான கல்வித் தாக்குதல், குழந்தைகள் மீதான சுகாதாரத் தாக்குதல் என அவர்களின் உலகம் போர்க்களத்தில் எரிந்து கொண்டிருப்பதைப் பற்றி பேசிக்கொண்டே இருக்கலாம். எந்த குழந்தை இறைவனின் வரமாக, பூமியின் புன்னகைக் கரமாக இருக்கிறதோ, அந்த பட்டாம்பூச்சிக் குழந்தைகளின் சிறகுகளைப் பாதுகாக்கும் வலிமை நமது சுயநலச் சமூகத்துக்கு இல்லாமல் போய்விட்டது என்பது தான் துயரம்.

குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டியதும், அவர்களை அடுத்த நிலைக்காகத் தயாராக்க வேண்டியதும் நமது கடமைகளில் ஒன்று என்பதை உணரவேண்டும். நமது குடும்பங்களில், நமது உறவினர்களிடையே, நமது நண்பர்களிடையே, நமது அயலாரிடையே உதவி தேவைப்படும் குழந்தைகளை நெஞ்சோடு அரவணைத்தாலே சமூகப் பரவலாய் அந்த அன்பின் செயல் பற்றிப் படரும்.

அன்பு பெற்றோர்களே, உங்களை நம்பி தேவன் தந்துள்ள பிள்ளைகளுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள், நானும் அவர்களின் ஆசிர்வாதமான வாழ்வுக்காக ஜெபிக்கிறேன்.

அடுத்த இதழில் சந்திப்போம். நன்றி.

# எங்கள் பேங்க் அக்கவுண்ட் நம்பர்!

நாங்கள் Bank of Baroda-களில் வங்கியில் இரண்டு கணக்குகள் வைத்துள்ளோம். செக் அல்லது டிராப்ட் என்னுடைய பெயருக்கு எடுத்து அனுப்புவதாக இருந்தால், எங்களது அலுவலக முகவரிக்கு ரிஜிஸ்டர் தபால் அல்லது கொரியர் மூலமாக அனுப்புங்கள். வங்கிக் கணக்கின் (Account) விபரம்:

1. ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
   ACCOUNT NO. : 49 510100003062

2. ACCOUNT NAME : **ANTANTULLA APPAM TRUST**
   ACCOUNT NO. : 49 510200000122
   BANK NAME : **BANK OF BARODA**
   IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
   SWIFT CODE : BARBINBB
   BRANCH & CODE : UNITED INDIA COLONY, KODAMBAKKAM & 4951
   CHENNAI – 600 024.

**APPAM - GOOGLE PAY : 98406 95296**

## அன்றன்றுள்ள அப்பம் வாசகர்களுக்கு!

### ஏலிம் சபைக்கு காணிக்கை அனுப்ப!

ஏலிம் சபைக்கு காணிக்கையோ, தசமபாகமோ அனுப்ப கர்த்தர் உங்களை ஏவுவாரானால், கீழ்க்கண்ட வங்கிக் கணக்குகளை பயன்படுத்துமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

ACCOUNT NAME : **ELIM GLORIOUS REVIVAL CHURCH**
ACCOUNT NO. : 49510100000230

ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
ACCOUNT NO : 49510100003063
BANK NAME : BANK OF BARODA
IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
BRANCH : KODAMBAKKAM
CHENNAI - 600024

**ELIM - GOOGLE PAY : 98848 77607**

Elim



# BOOK OF ROMANS

# ரோமர் புஸ்தகம்

**(CHAPTER BY CHAPTER)**



## EVERY WEDNESDAY EVENING
## 6:30 PM - 08:30 PM

ஒவ்வொரு
புதன்கிழமை
மாலை 6:30 மணிமுதல்
8:30 மணிவரை

தொடர்ந்து வருகின்ற
அனைவருக்கும்,
முடிவிலே சான்றிதழ்
வழங்கப்படும்

*Pastor*
**OSBORNE JEBADURAI**



**ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்**
50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம் சென்னை - 600024
9884916777, 9003067777

உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்.
யோவான் 16:20



# சிறப்பு ஞாயிறு ஆராதனைகள்



போதகர்.
**ஆஸ்பார்ன் ஜெபத்துரை**

| | | |
|---|---|---|
| 1 | முதல் ஆராதனை | 5:00 – 6:45 |
| 2 | இரண்டாம் ஆராதனை | 7:00 – 8:45 |
| 3 | மூன்றாம் ஆராதனை | 9:00 – 11:15 |
| 4 | நான்காம் ஆராதனை | 11:30 – 1:00 |
| 5 | மாலை ஆராதனை | 6:30 |

## ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்

50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம் சென்னை - 600024.
9884908777, 9003067777

If indelivered please return to:

**Elim Glorious Revival Church**

#50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600024, India
for 24x7 Prayer 91-9444322200, 9444322211
Email: enquiry@elimgrc.com, website : www.elimgrc.com